REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. புதுவை, பவ ஹூ மார்கழி மீ ௫ உ (20—12—34) NO. 4

## திருமந்திரம்.

பச்சிம திக்கிலே வைச்சவா சாரிய
னிச்சலு மென்னை நினையென்ற வப்பொரு
ளுச்சிக்குங் கீழது வுண்ணுக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே.

பொட்டடித் தேங்கும் பிதற்றித் திரிவேனைப்
பொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
றட்டொக்க மாறினன் றன்னையு மென்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே.

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ
னிருக்கின்ற தன்மையை யேது முணரார்
பிரிக்கின்ற விந்து பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட வீசனைக் கண்டுகொண் டேனே.

கூடு முடல்பொரு ளாவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருண்ஞான சத்தியாற்
பாட லுடலினிற் பற்றற நீக்கியே
கூடிய தானவ னுங்குளிக் கொண்டே.

கொண்டா னடியே னடிமை குறிக்கொள்ளக்
கொண்டா னுயிர்பொருள் காயக் குழாத்தினைக்
கொண்டான் பலமுற்றுந் தந்தவன் கோடலாற்
கொண்டா னெனவொன்றுங் கூறகி லேனே.

குறிக்கின்ற தேகமுந் தேகியுங் கூடி
னெறிக்கும் பிராண னிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை
பிறக்க வறியாதார் பேயுட னொப்பரே.

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

புதுவை,

பவ ௵ மார்கழி ௴ 5 ௳

# கேள்வி முயல்.

இவ் அமுத வாக்கியம் ஔவையார் அருளிய ஆத்திசூடி என்னும் சூத்திரக் கொத்துள் ஒன்று. இஃது உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பிய பொருளை உடையது. "அறிவுடையோர் சொல்லும் பொருளுரைகளைக் கேட்பதற்கு முயல வேண்டும்" என்பது உலகியலுக்கு ஒப்பிய பொருளாகும். கல்வி கேள்வி என்பன உண்மை நிலைக்கும் உலகியலுக்கும் ஒப்பியனவாய் உள்ளன. உலகியலுக்கு ஒப்பிய கல்வி என்பது படிப்பு எனப்படும். உண்மை நிலைக்குரிய வாய்மையான கல்வி இன்னது என அதன் பண்பும் பயனும் "கல்வி" என்னும் கட்டுரையில் ("வித்தகம்" தொகுதி 2 இல. 2) கூறப்பட்டன. சீவர்கள் இம்மை மறுமைப் பயன்களை அடைதற்குக் கல்வி கேள்விகள் இன்றியமையாதன என்பது யாவரும் நன்று அறிந்த உண்மையே யாகும். நூல்களைப் படித்தவரும் படிக்காதவரும் கேள்வியை விரும்புவர்; அறவுரைகளையும் காலதேச நிகழ்ச்சிகளையும் சங்கீத இசைகளையும் கேட்டுக் களிகூர்வர்; அறியாதன அறிந்து திருத்தமுறுவர். இதன் பொருட்டாகவே கூட்டங்கள் சமாஜங்கள் சங்கங்கள் சபைகள் பிரசங்கங்கள் போதகங்கள் என எத்தனையோ பல இயக்கங்கள் உலகியலாகி மலிந்துள்ளன. ஒருவன் நூல்களைப் படிக்காதவனாயினும் அவற்றின் பொருளை அறிந்தோர்பால் கேட்க வேண்டும் எனவும் அஃதே அவனுக்குத் தளர்ச்சி ஏர்படும் காலத்தில் —மனக்கவலை ஏற்படும் காலத்தில் பற்றுக்கோடாகித் துணைபுரியும் எனவும் தேவரும் கூறினர்.

## குறள்.

கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

(ஷ 42 அதி. கேள்வி செ. 4)

ஒழுக்கத்திற் சிறந்த அறிவுடையோர் சொற்களைக் கேட்டல் ஆபத்துக் காலத்தில் அரும்பெரும் துணையாகும்.

## குறள்.

இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார் வாய்ச் சொல்.

(ஷ ஷ செ. 5)

என்பது தேவர் வாக்கு. மாயா காரியமாகிய முன்னிலைக் கோரணிகளால் அவச்சலனமடைந்து வருந்துவோர்க்கு, நன்னெறிக் கண் ஒழுகும் பெரியார்வாய்ச் சொற்களாகிய அறவுரைகள், வழுக்கும் தன்மையுடைய சேற்று நிலத்து இயங்குவோர்க்கு ஊன்றுகோல் போலத் துணை புரியும் என்பது இதன் பொருளாகும். வழுக்குதல் உளதாயபோது ஊன்றுகோல் பற்றுக்கோடாகி நின்று கீழே விழ ஒட்டாது தாங்குவது போல, முன்னிலைக் கோரணிகளால் அவச்சலனமடைவார்க்கு ஒழுக்கமுடையார் அறவுரைகள் ஆகாமியத்தை விளைத்தலாகிய பாபச் செயலைப் புரிந்து பிறவிப் படுகுழியில் விழ ஒட்டாது தடுக்கும் என்பது கருத்து. ஒழுக்கம் இல்லார் கூற்றுக்கள் சுய நலம் கருதியன வாதலின் முன்பு இனிய போலத் தோன்றிப் பின்பு துன்பம் விளைத்தலானும் அவை பூரணமாகக் கைக்கொள்ளப்படாமையானும் ஒழுக்கமுடையார் வாய்ச் சொல் ஊற்றுக்கோல் அற்று எனப்பட்டது. பண்டைக் காலத்து அரசரும் பிறரும் ஒழுக்கமுடையார் அறவுரை கேட்டுப் பாபச் செயல்களை ஒழிந்து உய்தி அடைந்தமை பழைய நூல்களால் வெள்ளிடை ஆகின்றது. கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னன் மலையமான் மக்களை யானையால் கொல்லுவிக்கவும் நெடுங்கிள்ளி என்னும் சோழ மன்னன் இளந்தத்தன் என்னும் புலவனை ஒற்றன் என மயங்கிக் கொல்லுவிக்கவும் துணிந்து மிகப் பெரிய பாபச் செயல்களையே உஞற்ற முயன்றபோது, கோவூர் கிழார் என்னும் புலவர் பெருமான் தம் அறவுரைகளாகிய இன் சொற்களால் அவ் அரசரைத் தேற்றி அன்ன பாவச் செயல்களைத் தடுத்து அவரை உய்யக் கொண்டமை புறநானூறு என்னும் சங்கச் சான்றோர் நூலால் தெரிகின்றது.

## புறநானூறு.

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமது பகுத்துண்ணுந் தண்ணிழல்வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறுர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

(ஷ செ. 46)

"(இ-ள்):- நீதான் புறவின் அல்லல் அன்றியும் பிறவும் உற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்த சோழனுடைய மரபில் உள்ளாய்; இவர் தாம் அறிவால் உழுது உண்ணும் கற்றோராது வறுமையை அஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையராய் வாழ்வாரது மரபினுள்ளார்; இவர் இப்பொழுது களிற்றைக் கண்டு தம் இளமையால் முன்பு வெருவி அழுத அழுகையை மறந்த புல்லிய தலையை உடைய சிறு பிள்ளைகள்; மன்றை வெருவிப் பார்த்து முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தை உடையர்; இது கேட்டாயாயின் நீ விரும்பியதைச் செய்வாயாக எ-று"

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடியவென் னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத்தீ தறிந்தன்றோவின்றேதிறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே.

(ஷை செ. 47)

"(இ-ள்):— வண்மையை உடையோரை நினைத்துப் பழுமரம் தேரும் பறவை போலப் போகி நெடிய என்று கருதாது அரிய வழிகள் பலவற்றையும் கழிந்து திருந்தாத நாவால் தாம் வல்லபடி பாடி ஆண்டுப் பெற்ற பரிசிலான் மகிழ்ந்து சுற்றத்தை ஊட்டித் தாமும் பொருளைப் பாதுகாவாது உண்டு உள்ள மலர்ந்து வழங்கித் தம்மைப் புரப்போரால் பெறும் சிறப்பு ஏதுவாக வருந்தும் இப்பரிசிலான் வாழும் வாழ்க்கை பிறர்க்குச் செய்யும் கொடுமையை அறிந்ததோ எனின், இல்லை. கூறுபடக் கல்வி முகத்தால் தம்மொடு மலைந்தோர் நாணத் தமது கல்வியான் வென்று தலையெடுத்து நடந்து அவ்விடத்து இனிதாக ஒழுகினல்லது, உயர்ந்த புகழையுடைய நிலமாரும் திருப்பொருந்திய நும்மை ஒக்கும் தலைமையும் உடைத்து எ-று".

இத்தகைய அறவுரை கேட்ட அரசர் தம் தம் பாபச் செயலினின்றும் நீங்கி உய்தி அடைந்தனர் எனவும், மலையமான் சிறாரும் இளந்தத்தனும் உயிர் பிழைத்தனர் எனவும் கூறுப. இவ்வாறு வருவன பல. "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்பது போன்ற அறவுரையால் பட்டினத்தடிகள் தமக்கு வாய்மையான பற்றுக்கோடு இன்னது என உணர்ந்து மதி வைராக்கியத்தோடு அதனை நாடி அடைவான் முயன்றனர் என அவர் சரித்திரம் கூறுகின்றது.

## திருவாசகம்.

"......அடிக்தடித்துவக் காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே."

(ஷை அற்புதப்பத்து செ. 3)

எனவும்,

"......நோக்கிநுண்ணிய நொடியன சொற்
செய்து.................."

(ஷை அதிசயப்பத்து செ. 8)

எனவும் மணிவாசகர் அருளியவற்றையும் உய்த்துணர்க. இன்னோரன்ன அறவுரைகளும், நூற்பொருளைப் பிறர் வாய்க் கேட்டலும், பிறவும் உலகியலுக்கும் ஒப்பியனவாய் உண்மை நிலை ஒன்று உளது என அதனை நாடுதற்கும் உண்மை நெறியில் வழுவாமைக்கும் உறுதுணை ஆகின்றன. இனி, உண்மை நிலைக் குரிய கேள்வியை முயலுதல் என்றால் என்னை? எனின், அதன் பண்பும் பயனும் ஒரு சிறிது கூறப்படும் :-

கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என ஞான நெறி நான்கு என்ப. உலகில் வழங்கும் சாத்திரங்களே ஞான நூல் எனவும் அவற்றை வல்லார் வாய் கேட்டலே வாய்மையான கேள்வி எனவும் அங்ஙனம் கேட்டனவற்றைத் தமது உணர்ச்சிவலிக்கு ஏற்ப உணர்தலே சிந்தித்தல் எனவும் அது கொண்டு தெளிவு பெற்று அமைதலே தேளிதலும் நிட்டை கூடுதலும் ஆம் எனவும் கூறி அமைவார் பலர். குரு எனக் கொள்ளப்படுவார் ஒருவரால் காட்டப்படும் குறிகளால் அநுட்டிக்கப்படும் உபாசக நிட்டையே வாய்மையான நிட்டை எனவும் அதுவே முத்தி நெறி எனவும் அமைவாரும் பலர். சாத்திரப் பெயர்பூண்டு உலகில் வழங்கும் நூல்களைப் படித்தலாலும் அவற்றின் பொருளைப் பிறர் வாய்க் கேட்டலாலும் உபாசக நிட்டை என்னும் போலி நிட்டையாலும் மெய்யுணர்ச்சி கைவருதல் முடியாதென்பது இதுவரை "வித்தக" வாயிலாக வெளி வந்த கட்டுரைகள் பலவற்றால் நன்று விளக்கிக் கூறப்பட்டது. உலகியலாகிய சாத்திரக் கேள்வியானது வாய்மையான கேள்வியைப் பெறுதற்குரிய சாதகங்களை உபதேசிக்கும் குருநாதனை அடையச் செய்யுமுகத்தால் பயன்படுவதே யன்றி, அது தானே முத்தி நிலையை அடையச் செய்யமாட்டாதென்பது வெள்ளிடையாம். சாத்திரம் என்பது வாய்மையில் தத்துவமே ஆகும். இதுபற்றியே உலகில் நூல்களாக வழங்கும் இடுகுறிச் சாத்திரங்களை "ஒவ்வாத சாத்திரம்" என்றனர் மணிவாசகர். (திருவாசகம் திருத்தெள்ளேணம் செ. 17.) இனி குருநாதன் உபதேசிக்கும் சாதக யோக விதிகளே வாய்மையான கேள்வி ஆமோ? எனின், அவை தாமும் வாய்மையான கேள்வியைப் பெறுதற்கு நேரே வாயிலாய் அமைவனவே யன்றி வாய்மையான கேள்வி என அமைவன ஆகா என்க. மற்று வாய்மையான கேள்வி எனப்படுவது யாதோ? எனின், கூறுதும் :— வாய்மையான கல்வியாற்றான் வாய்மையான கேள்வி அடையப்படவேண்டும். நமது தூலம் ஒருவாறு அமல மடைந்தாலன்றி வாய்மையான கேள்வியை அடைய முடியாது. குரு அருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் தூலம் விமலமாதலே கல் என்னும் பஞ்சதநுக்கள் (வி) அழகு பெறுதலாகிய

வாய்மையான கல்வி என்பது. தூலம் ஒரு சிறிது அமல மடைந்தபோது உள்ளே அமல நாதங்களாகிய வாய்மையான வேதங்கள் கேட்கப்படும். இங்கே நாதங்கள் எனப்பட்டன மருளுடம்பினர்க்குரிய அசுத்த நாதங்கள் அல்ல; இவை வேதங்கள் எனப்படுதற்கு உரியன ஆகா. அமல நாதங்களே வேதங்கள் எனப்படுதற்கு உரியனவாகும். விமல யாக்கை உடையராய் அமல நாதங்களைக் கேட்கும் மெய்யடியாரே எம் பெருமான் திருவடிகளைக் கண்டு போற்றும் வாய்மையான கல்வி கேள்விகளை உடையார் என அறிதல் வேண்டும். இது பற்றியே,

### ஞானசம்பந்தர் தேவாரம்.

"கற்றல்கேட்டல்உடையார்பெரியார்கழல்
[கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிரமாபுரமேவியபெம்மானி
[வனன்றே."
(ஷை திருப்பிரமபுரம்பண்நட்டபாடைசெ.2)

என அருளிச் செய்தார் ஞானசம்பந்தர். பெற்றம் ஊர்தல் = ரக்ஷக தேகமாகிய விமல யாக்கையில்—மால்விடையில் அமல உணர்ச்சி ஆக்கமுற்று விளங்குதல். பிரமபுரம் = இருதய புண்டரீகம்; தகராகாசம் என்க.

### திருமந்திரம்.

தேவர்பி ரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின்
ஓதுமின்கேண்மின்உணர்மின்உணர்ந்தபின்
ஓதி யுணர்ந்தவர் ஓங்கிநின் றாரே.

(ஷை 1ம் தந். கேள்விகேட்டமைதல் செ. 2)

இதனால் உலகியலாகிய கல்வி கேள்விகளால் தேவர் பிரானை அறிய முடியாது என்பதும் விமல காயம் பெற்ற மெய்யடியாரே வாய்மையான கல்வி கேள்விகளால் மெய்யுணர்ச்சி பெற்றுப் படியேற்றம் பெற வல்லவர் என்பதும் நன்று புலப்படும்.

"காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்........"

என வேதம் ஓதுவாராகிய வாய்மையான கேள்வியுடையார் இலக்கணத்தை அருளிச் செய்தார ஞானசம்பந்தர். வாய்மையான கேள்வியாற்றான் உணர்ச்சி அமலமடையும்—பூரணப்படும்—சிவமாகும் என்க. நம்முள்ளே வேத வடிவாகிய ஆசானை வாய்மையான கேள்வியாற்றான் அறிய வேண்டும். வேத வித்தாகிய சிவம் பேசுதல்—பேசக் கேட்டல் என்பது வாய்மையான கேள்வியே ஆகும். "வித்தகம் பேசேல்" என்னும் கட்டுரையிலும் இவ்வுண்மை சிறிது கூறப்பட்டது. ("வித்தகம்" தொகுதி1 இல. 51.). அமல ஐகார ஒலியாகிய வாய்மையான வேதங்கள்—"எம்பெருமான் முன்பால் முழங்கு முரசு" எனப்படும். அமல நாதங்கள் கேட்கப் படுதலாகிய வாய்மையான கேள்வியாற்றான் பூரண ஞானம் உளதாகும். இந்த அமல ஐகார விளைவே ஒவ்வொரு சீவர்க்கும் முத்தி நெறிக் குரிய வேதாகம விதிகளாய் அமையும். அமல முதற்படி கண்ட—வாய்மையான வேதங்களை ஓதிய மெய்யடியான் மேல் ஆவனவற்றை யெல்லாம் தன்னிலையில் உணர்ந்து கொள்வான் என்பதன் உண்மை இதுவேயாம். இது பற்றியே,

### திருமந்திரம்.

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.

(ஷை வேதச்சிறப்பு செ. 1.)

என்றனர் எம் அண்ணல் திருமூலர். உலகில் வழங்கும் நூல்களைப் படித்து மலைதலாகிய தர்க்க வாதங்களை விட்டு உரிய சாதகங்களால் மதி வைராக்கியத்தோடு முயன்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பெற்றவரே—கண்களில் அமல நீர் பெருக்கமுறப் பெற்றவரே—வாய்மையான உபநயனம் பெற்றவரே வாய்மையான கேள்வியால்—வாய்மையான வேதங்களை ஓதுதலால் யாவற்றையும் அறிந்து ஒழுகி வீடு பெறுதற்கு உரியர் என்க. "பாடி எழுகின்ற வேதாகமங்களும், நாடியினுள்ளாக நான் கண்டவாறே" (திருமந்திரம்) என எம் அண்ணல் அருளியதும் அறிக. எங்கே பாடி எழுகின்ற வேதம் என்றார்? நம்முள்ளே நாடியினுள்ளாக என்றார். ஆதலால் ஒலி வரி வடிவமாய் உலகில் வழங்கும் பாஷைகளில் எழுதப்படாதனவாய் தர்க்க வாதங்களோடு படித்துப் பாராயணஞ் செய்யப்படாதனவாய் நம்முள்ளே கேட்டு உணரப்படும் சுருதிகளாகிய (சுருதி என்றால் கேட்கப்படுவேது என்பர்) அமல நாதங்களே வாய்மையான வேதங்கள் என்பது வெள்ளிடை மலை என விளங்கி நிற்றல் கண்டு கொள்க. எல்லாச் சமயத்தவர்க்கும் சாதியாளர்க்கும்—சகல சீவராசிகட்கும் உரிய வேதங்கள் இவையே என்க. ஆசான் உரை வழி நின்று வாய்மையான சாதகங்களை வழுவற அநுட்டித்தலாற்றான் வாய்மையான கேள்வியை—கல்வி கேள்விகளை அடையவேண்டும்.

வாய்மையான கற்றல் கேட்டல் என்னும் பயில்வுகளால் அழுக்கு என்னும் அசுத்த நிறையால் தடித்த தூலச் சிலையை அணு அணுவாக வாடச் செய்ய வேண்டும். மலகாயத்தை விமலமாய் அமலமாய் மாற்றமடையச் செய்ய வேண்டும். காயம் விமல மடைந்த போது அக்காயமே சுத்த நாத வடிவமாகும். ஆதலால் அதுவே கேள்வி எனப்படும். அதனால் தூய உணர்ச்சி ஆக்கமுறுவதே சிந்தித்தல் என்பது. "அடியேனுடச் சிந்தையாய் வந்து" எனவும் "உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து" எனவும் "மெய்க்கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானார் கிடந்தார்" எனவும் (திருவாய்மொழி) "சிந்தனையுள் தேனூறி நின்று" எனவும் "சித்தம் சிவமாக்கி" எனவும் (திருவாசகம்) வரும் தத்துவப் பெரியார் மறைமொழிகளை நோக்குக. இத்தகைய உணர்ச்சி பூரணப்படுவதே தெளிதல் என்பது. அப்பால் உளதா

வதே நிட்டை என்பது. இதுதான் இயற்கை நிட்டை — சகச நிட்டை என்க. இவ்வாற்றால் கேட்டல் சிந்தித்தல் தேளிதல் நிட்டை என்னும் ஞான நெறிகளின் உண்மை கண்டு கொள்க. கேட்டல் என்பதற்குச் சாத்திரங்களை வல்லார் வாய்க் கேட்டல் என அமைவது உலகோர் கண்ட போலிப் பொருளையாம். உடலும் உயிரும் நிறையோடு கூடிக் குழைந்து அமல மடைந்து நித்தியத்துவம் பெறாத மருளுடம்பினராகிய சீவர்களைச் சகச நிட்டை உடையோர் என்பது வெற்றுரையே — போலி வழக்கே என்க. சகச நிட்டையின் இலக்கணம் "வித்தகம்" தொகுதி 1 இல 36 இல் கூறப்பட்டது. ஆங்குக் காண்க. கற்றல் கேட்டல்களால் தூலச் சிவை வாட்டமடைவதே சாதலுறாச் சாதல் என்பது.

"ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே,
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே."

என்பது திருமந்திரம் (ஞானவேடம் செ. 4.) சீரத்துள்ள அசுத்த நிறையைக் கெடுத்தலே வாடச் செய்தல் என்பது. அசுத்த நிறை கேடடைதலும் அமல நிறை ஆக்க முறுதலும் ஒருங்கே நிகழும் என்க. இதனால் மருளுடம்பு சாதலுறாச் சாதலடைய ஞான சத்தி வடிவமாகிய பிரணவ மந்திர சீரம் (ஓ வடிவம்) ஆக்கமுறும் என்க. இத்தன்மை வாய்க்கப் பெற்றவரே "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்க. இவரே வாய்மையான கல்விமான்கள் — கேள்வியாளர் —மாசற்ற கல்வியும் கேள்வியு முடையவர் —- நவையறு காட்சி உடையவர் என்க. தூலச் சிவை வாட்ட மடைதலையே — ஞான சத்தி வடிவமாக மாற்ற மடைதலையே பின் வரும் பரிபாஷைகள் மலிந்த மறைமொழிகளால் நன்று புலப்படுத்தி யருளினார் ஞான சம்பந்தப் பிரபு என அறிதற்பாற்று.

## ஞானசம்பந்தர் தேவாரம்.

"...........................................
மணிவளர்கண்டரோமங்கையைவாட
மயல்செய்வதோஇவர்மாண்பே"

(ஷை திருப்பாச்சிலாச்சிரமம் பண்—தக்கராகம் செ. 1.)

நஞ்சை உண்ணுதலால் — முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் அசுத்த நிறையாகிய அசுத்த ஐ அமல ஐ ஆக மாற்ற மடைந்து வாய்மையான தொண்டுக்குரிய ஊராகிய தோண்டூர் எனப்படும் தோண்டையில் — கண்டத்தில் இலங்கும். "மணிவளர்கண்டம்" "நஞ்சணிகண்டம்" என்பனவற்றின் பொருள் இதுவே என்க. இத்தன்மை வாய்க்கப் பெற்ற மெய்யடியாரே தூலச் சிவையை வாட்டி அதனை ஞான சத்தி வடிவமாக மாற்றுதற்கு உரியவர் என்க. இது பற்றியே "மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே" என்று அருளிச் செய்யப் பட்டது.

"கற்றகேள்விஞானமானகாரணம் என்னைகொலாம்........"

(ஷை திருநெடுங்களம்.)

[வாய்மையான கல்வியால் வாட்டமடைந்த— சாதலுறாச் சாதலடைந்த உடலம் ஞான சத்தி வடிவமாக மாற்றமடையும் என்பதனை உணர்த்தி நின்றது இம்மறை மொழி என்க. கற்ற கேள்வி = வாய்மையான கல்வியால் அடையப்படும் கேள்வி. கேள்வியே தூய உணர்ச்சி மயமான உடலாகும் —- ஞானமாகும். கேள்வி பெண்பால்; சிவை. கேள்வன் ஆண்பால்; சிவன்.]

## ஔவை குறள்.

ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய உணர்வு.

(ஷை உள்ளுணர்தல் செ. 8)

ஞானத்தால் ஆய உடம்பு = ஞான சத்தி வடிவம் — ஓ வடிவம். உடல் ஞான சத்தி வடிவமாக மாறுதலாற்றான் வாய்மையான மௌனம்—"தான் அவன் ஆகும் சமாதி" ஏற்படும் என்பதன் உண்மை இதனால் நன்று வலியுறுதல் கண்டு கொள்க. கல்வி கேள்விகள் ஒற்றுமைப் படுதலே உடலும் உயிரும் ஒழிவற ஒன்றுதலும் ஆம். வாய்மையான கல்வியினாற்றான் கேள்வி தூய்மைபெற்று உணர்ச்சி பூரணப் படும். ஓதாது உணர்தல் என்பதன் உண்மையும் இதுவே. இங்கே ஓதுதல் என்பது நூல்களைப் படித்தல் என்னும் பொருட்டு. ஒருவன் நூல்களைப் படிக்காதவனாயினும் பண்டை நற்றவப் பயனால் பக்குவமுடையனாய்க் குருவருளால் வாய்மையான கல்வியை அடையப் பெறுவானாயின் அதுவே அவனுக்கு உறுதுணையாகி அவன் அஞ்ஞானத்தை —மனக்கவலையை ஒழித்துப் பூரண ஞானத்தை அளிக்கும்; ஓதாது உணர்தலாகிய வாய்மையான பேரறிவை அளிக்கும் என்க. உலகியலாகிய படிப்புக்கும் ஓதாதுணர்தலுக்கும் உள்ள இடையீடு மருளுக்கும் அருளுக்கும் உள்ள இடையீடு போல்வதாய் அளவிடுதற்கு அரியதாகும்.

## குறள்.

"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை."

(ஷை 42-ம் அதி. கேள்வி. செ. 4)

என்னும் தேவர் வாக்கும், இவ் வாற்றால், உண்மை நிலைக்கும் ஒப்பிய பொருளை உடையதாகின்றது. இங்கே கற்றல் என்பது உலகியலுக்கு ஒப்பிய படிப்பை உணர்த்தி நின்றது. உலகியலுக்கு ஒப்பிய படிப்பும் அதற்குரிய கேள்வியும் பூரண ஞானத்தையும் நித்தியத்துவத்தையும் அளிக்க மாட்டா ஆதலின், அவற்றை அடைய அவாவுவோர் வாய்மையான கல்வி கேள்வியை பெறுதற்கு முயல வேண்டும். கேள்வியை அடைய முயலுதலே முயற்சியும் ஆம். முயற்சி என்றால் "சி" யை "சி" என்னும் இலக்குமியை அடைய முயலுதல் எனப்பொருள் படும். "முயற்சி" என்னும் கட்டுரையை நோக்குக. (வித்தகம் தொகுதி 1 இல. 23.) இந்தச் சிகாரந்

தான் இலக்குமி — மலைஇலக்கு— நடு நாயகம் — கேள்வி வடிவாகிய ஞான சத்தி என்க. இந்த ஞானசத்தியாகிய கேள்வியை அடையப்பெற்றால் இவளே சகல கலா வல்லபத்தையும் அளிப்பள்.

### தாயுமானவர் பாடல்.

"பாரகாவியகவித்வநான்மறை
பராயணம்செய் மதியூகமும்
அட்டசித்தியும்நல்அன்பருக்குஅருள
விருதுகட்டியபொன்அன்னம்."

இவளே என்க. நாத வடிவாகிய சிவையை—ஞான சத்தியை—நாதந்த ரூபமாகிய இவளை அடைய முயல வேண்டும் "கேள்வி முயல்" என்னும் ஔவையார் அமுத மொழியின் உண்மைப் பொருள்— இரகசியார்த்தம் இதுவே என அறிதற்பாற்று. மேலும் விரிப்பிற் பெருகும். உலகியலாகிய கேள்விகளால் வாய்மையான கேள்வி ஒன்று உண்டு என அதனை அடையும் அவா உளதாகும். பின் குருவருளால் வாய்மையான கேள்வியும் அதனால் நித்தியத்துவமும் உளதாகும் என்க.

### திருமந்திரம்.

அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டு
மறம்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் [மீசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே.

(ஷை 1ம் தந். கேள்விகேட்டமைதல் செ. 1)

உறுதுணை யாவ துயிரு முடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணைகேட்கிற்பிறப்பில்லைதானே.

(ஷை ஷை செ. 8)

இதுகாறும் கூறியவைகளால் "கேள்விமுயல்" என்னும் ஔவையார் அமுத வாக்கின் உலகியலுக்கு ஒப்பிய பொருளும் உண்மைப் பொருளாகிய இரகசியார்த்தமும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

# "வித்தக"த்தின் இரண்டாவதாண்டு வாழ்த்து.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வாசரும்
தமிழாசிரியர் கழகத்து அங்கத்தவருள் ஒருவரும்
தமிழ்ப் பண்டிதருமாகிய
**திரு. க. மு. இளையதம்பிப் பிள்ளையவர்கள்**
வழங்கியது.

### வெண்பா.

பஞ்சாக் கரமுடையாய் பாவமல மங்கி முன்சேர்
பஞ்சாக் கரக்கப் படர்குவாய் — எண்டோள்
வியாழ முறுவாய் விளங்கு மதியாய்
தயாள சிவ மாகுவைநீ தான்.

[பஞ்சாக்கரம்—வித்தகம்; ஐந்தெழுத்து. எண்தோள்—எட்டுப்பக்கம், எட்டுப்புயம். வியாழம்—குருவாரம், பாம்பு.]

### ஆசிரிய விருத்தம்.

நானூர்த்து நல்லமு தேனப்படிவ னண்ணுவினை
நந்தவருள் தந்த மணிதான்
நாட்டுதிரு வாசகமெனப் பெரிய பௌவமோடு
நாவலர்க ளுண்ணு மமுதாய்
வானூர்த்த குறள்மறை யெனும்பரவை யோடுதிரு
மந்த்ரமாஞ் சிந்து விடையும்
வற்கட மொழிப்பனென வார்புனல் முகந்துகொண்
டேபுதுவை யாய கிரிமேல்
தானூர்த்து முப்பொருள் விளக்கமெனு நீத்தமே
தாரணியி லேயொழுகவே
தடதடென வேமுழங் கிப்பொழியுங் கொண்டலே!
தமிழீழ முற்ற திருவே!
ஞானூர்த்த முற்றபெரு வித்தகப் பெயர் பெறீஇ
ஞாலமுழு தாய பெரும!
நங்கை யொரு பங்கினிறை பொங்கு மருளாலூழி
துங்கமுற வாழிய வரோ.

### கட்டளைக் கலித்துறை.

காட்டைக் கிரியைக் கடலைப்பன் னாட்டைக் கடந்து [சென்றே
வீட்டை நெறியை விளக்கிப்பன் மக்கள் விழையவினை
யாட்டைப் புரிபவ! அந்தோவுன் சீரடி நையுமிரண்
டாட்டைப் பருவத்த னல்லோ! என் வித்தக அற்புதனே.

# "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி."

## புதுவை வைரஊசி எழுதியது.

( 3-ம் வாரத் தொடர்ச்சி. )

திருநான்மறை முடிபு எனப்படும் வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதங்கள் பிரமம் எனப்படும் சிவமே சத்தியம் எனவும், பேத உணர்வால் முப்பொருளும் வேறு வேறு காணப்படுவன எனவும், அபேத உணர்வால் முப்பொருளும் சிவபரம் பொருளே எனவும், அத்தகைய அபேத உணர்வே உண்மை ஞானம் — மெய்யுணர்ச்சி எனவும், அவ்வாறு அப்பர சிவப் பொருளை அநுபூதியால் அறிந்தவனே அஃதாவது முன்னிலையாய்ப் பிரபஞ்ச வடிவாய் விளங்கும் பிரமத்தை உறவு படுத்தியவனே — தன்னிலையும் முன்னிலையும் ஒன்றாகப் பெற்றவனே பிரமமாவான் — உண்மை முத்தியடைவான் எனவும் ஓலமிடுகின்றன. முன்னிலையாவும் பிரமமாகும் போது — சிவவடிவாகும் போது தன்னிலையாகிய உடலுயிரும் ஊனம் நீங்கி ஒளி மயமாய்ப் பிரமமாதல் சொல்லாமலே அமையும். உண்மை வேதாந்தமாகிய சிவாத்வைதம் போதிக்கும் சுத்த சாதகமும் இவ்வுண்மையையே தெளிவாக விளக்கிக் கூறுகின்றதன்றி வேறு வீணான கற்பனைகளை மனோதர்மத்தால் சிருட்டி செய்து கூறுகின்றதா? காமிகாதி வாதுளாந்தமாயுள்ள இருபத்தெட்டு ஆகமங்களின் உத்தரகாண்டம் அனைத்திலும் வீராகம வாதுளாகமங்களின் பூர்வ உத்தரகாண்டங்களிலும் சிவாத்துவித சித்தாந்தமே கூறப்பட்டிருத்தலால் அதுவே ஆகமாந்தமாகிய உண்மைச் சைவ சித்தாந்தம் என்பது வெள்ளிடை மலையாம். "தத்துவமசி" வாக்கியப் பொருளாகிய அங்கலிங்க ஐக்கியம் என்னும் உண்மை முத்தியை உணர்த்தும் சிவாத்துவிதமே சைவ சித்தாந்தம் எனவும், அதுவே மஹாதந்திரம் எனவும், சிவஞானம் எனவும் சகல சாஸ்திரமுடிபு எனவும் அதிசூட்சுமமானது எனவும் திவ்ய ஆகமமாகிய வாதுளம் கூறுகின்றது. அவ்வாகம வசனங்களையெல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டி விளக்கப்புகின் மிக விரியும். சிவாத்துவிதமே சுத்த நெறியாகும். "சுத்தம் ஆசில் சிவாத்துவிதம்" என்பது சுத்தசாதகம். (செ. 1) சிவாத்துவித மாண்பு தெரிக்கும் வாதுளமும் "சுத்தவாதுளம்" எனக் கந்தபுராணத்தால் விதந்து கூறப்பட்டமையும் இதற்கு உறு சான்றாதல் கண்டு கொள்க. இவ்வாற்றால் வேத முடிபும் ஆகம முடிபும் சிவாத்துவித சைவ சித்தாந்தமே என்பது தடக்கை நெல்லி என விளக்கம் பெறுதலைக் காய்தல் உவத்தல் அகற்றி அறிஞர் கண்டு தெளிவாராக.

"வித்தகம்" என்னும் ஞானபாஸ்கரன் வெளிப்பட்டதும், போலிக் கோள்கைகட்குச் சாவுமணி அடிக்கப்படுதலால் தமது லௌகிக ஆதிக்கத்துக்குப் பங்கம் வந்துவிட்டதே என அலமந்து தட்டளுப் புற்றுக் சாதுயர் அடைந்து பொறாமையால் பொருந்தாப் பொய்யுரை புகன்று வீண் குதர்க்கத்தையாவது வெளியிட்டு வம்புச் சண்டையைக் கிளப்பி விட்டால் தாம் கோரியது கைகூடும் என நினைந்து உண்மையை உணரும் ஆற்றலும் காதலும் இல்லாத தஸ்யுத்தன்மை மேற்கொண்டு நிற்பவருக்கு இவ்வுண்மைகளையெல்லாம் கூறுவதால் பயன் என்னை? ஆயினும் நுண்ணறிவுடையார் உண்மையை உணர்ந்து கொள்வார் என்பது கருதி ஒரு சில கூறப்பட்டன.

சந்தான குரவர் சரீரம் இன்ன இன்ன இடத்தில் புதைக்கப்பட்டன எனவும், அவ்வாறே தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இறந்துவிட்டனர் என்பது "ஊன் உயிர் வேறு செய்தான்" என்னும் அன்னவர் மறைமொழியால் பெறப்படுகின்றது எனவும் நிர்மூட நிபுணர் ஒருவர் சிறிதும் அஞ்சாது கூறத் துணிந்து தம்மையும் சைவர் — சைவ சமயத்தவர் எனக் கருதி வெட்கமின்றி வெளியே உலாவுகின்றார் என்றால் இத்தகைய சிவத்துரோகியை எவ்வாறு மதிக்கவேண்டும் என்பதனைச் சிவநேசர்களாகிய அறிஞர்களே அறிந்து கொள்வாராக.

சந்தான குரவரை இல்லது கூறி இகழத் துணிவது வித்தகத்தின் நோக்கமன்று. சந்தான குரவர் பலவகையால் புண்ணிய சீலரே என்பதில் ஐயமில்லை. மஹாவித்வத் திறம் செல்வம் அதிகாரம் கடவுள் வழிபாடு முதலியவற்றால் அவர்கள் மிகச் சிறந்தவர்களே. சிவநேசர்களாகிய அவர்கள் நிலைமை தற்காலம் இத்தமிழுலகத்தில் யாருக்கும் இல்லை என்றே கூறவேண்டும். ஆனால், முத்தி நிலை கைகூடுவது என்றால், அது எளிதில் முடியுமா? அயன் கையெழுத்தைக் கிழித்து — விதியை வென்று — காலனை உதைத்து நித்தியத்தும் அடைவது எளிதின் முடிவதாகுமா? அம்மம்ம! அரிதரிது! மா அரிது அல்லவா? மெய்யடியாராகிய தத்துவப் பெரியாரெல்லாம் எவ்வளவோ காலம் அளவிடற்கரிய துன்பங்களை அடைந்தே தங்கள் அசுத்த உறுப்புக்களை அமல தநுவாக மாற்றி — துவிஜத்துவமடைந்து முத்தி நிலை கைகூடப் பெற்றனர் என்பது அவ்வ

வர் பாடல்களால் நன்கு புலப்படுகின்றது அல்லவா? வித்தியா சாமார்த்தியத்தாலும் உபாசகநிட்டைகளாலும், தற்சுதந்திரத்தால் கண்டுபிடிக்கும் வேறு எவ்வகையான தந்திர மந்திர யோக சமாதிகளாலும் குட்டிக் கரணங்களாலும் மாறிப் பிறந்து முத்தியடைதல் முடியுங் காரியமன்று. பிரமவித்தை என்பது உலகில் வழங்கும் நூல்களால் அறிய முடியாதது. ஆதலால் மாறிப் பிறந்து உண்மை முத்தியடையாத அவர்களைச் சமய குரவருக்கு ஒப்பானவர் என்று அநாவசியகமாகப் பொய்யுரை புகன்று புகழத் துணிவது என்றால் அஃது அப்பெரியாரை இகழ்வதேயன்றி வேறு என்னாகும்? "கிராம முன்சீப்" வேலை பார்க்கும் ஒருவனை "ஹைக்கோட் ஜட்ஜ்" என்று கூறினால் அஃது அவனுக்கு இகழ்ச்சியேயன்றிப் புகழ்ச்சியாகுமா? உள்ளதை உள்ளவாறு கூறுவதே முறையான புகழ்ச்சியாகும். உண்மை கடைப்பிடிப்பது அறிஞர் கடன்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்றவாறு அறிவிலிகள் சிலர் சுத்த சாதகத்தை இல்லது கூறி இகழு முகத்தால் சமய குரவர் அடைந்த உண்மை முத்தியை மறுத்துச் சிவாபாரதிகளாகி வெள்ளறிவுடையார் ஒருசிலரை வஞ்சித்து நின்று இக்கட்டுரையை எழுத வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி "வைரஊசி" ஆகிய என்னைச் சாணையில் ஏற்றிக் கூர்மையை அதிகப் படுத்திவிட்டார்கள்.

எம்மைவிஞ்சிடுவோர்எவருமிங்கிலையெனுத்
தம்மைத்தாமேதனிவியந்துஎழுதும்
போலிநாவலர்கள்புரைபடவியற்றிய
நூலுரைப்பிழைகளைநுண்ணிதினுய்ந்தவர்.

என அறிஞர் சிலர் கூறியவாறு போலி நாவல கஜங்களுக்கும் போலி வித்துவ நரிகளுக்கும் அரியேறு என வதிந்த சுன்னைக்குமரன் அணிந்திருந்த

# புத்தக மதிப்புரை.

மங்கையர்க்கோர் மதியுரை.

"ஈழகேசரி" என்னும் வாரவெளியீட்டில் பகுதி பகுதியாக வெளிவந்த இக்கட்டுரை அப்பத்திரிகையின் அதிபரால் சிறிய சுவடியாக வெளியிடப் பட்டுள்ளது. ஆங்கிலப் படிப்பின் ஆதிக்கத்தால் தமிழ் ஆசாரங்களை மறந்து மேனாட்டு நாகரீகங்களில் ஈடுபட்டு உழலும் தற்காலத் தமிழ் மங்கையர்க்கு நல்லறிவு ஊட்டுகின்றது இச்சிறிய நூல் என அறிதல் வேண்டும். இதனை இயற்றியோர் பொது அறிவில் சிறந்தவரும் ரஸாயன சாஸ்திரச் சுருக்கம் முதலிய நூல்களை எழுதியவருமாகிய யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஸ்ரீமாந். தா. பொ. மாசிலாமணிப் பிள்ளையவர்கள் ஆவர். உணவு உடை நடை முதலியவற்றில் நிறை முறை தழுவி ஒழுகுவதால் சரீரமும் மனமும் சிறிது தூய்மை அடைந்து சுக வாழ்வடைதற்கு ஏற்ற அநுபவ உண்மைகளை யாவரும் எளிதின் உணரும்படி நல்ல தமிழ் நடையில் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் இந்நூல் தற்கால மங்கையர்க்கு மிக்க பயன் அளிக்கும் என்பது மிகையன்று. அந்நூல்கள் இரண்டும் யாழ்ப்பாணச் சுன்னாகம் "தனலட்சுமி புத்தகசாலை"யில் பெறற்பாலன. பிரதிகள் அனுப்பியோருக்கு எமது வந்தனம் உரியதாகுக.

[ப—ர்]

---

"வைரஊசி" இது என அறிதல் வேண்டும். கேட்பார் இல்லாமையால் ஒவ்வொருவரும் தாமாகவே "வித்துவான்" முதலிய பட்டங்களைப் புனைந்து கொண்டு வாயில் வந்தன கூறிக் கோடின்றி வட்டாடி வாழ்க்கை நடாத்தும் இக்காலத்தில் உண்மைக்கு மாறாகப் பேசி என்னை எதிர்ப்பவரை நாவெழ ஒட்டாது அடக்கிவைக்கும் ஆற்றல் எனக்கு உண்டு என்பதைத் தெரிவிக்க வந்த புதுவையான் யான். என்பெயர் "வைரஊசி". அயிக்கவாதம் பேசும் அறிவிலிகள் இதனை அறிந்து அடங்குவது நலமாகும்.

ஓம் தத்ஸத்

---

இனும்! இனும்!!

## சுத்த சாதகம்

துறவின் றன்மையையும், தேகம் சித்திபெற்றால் முத்தியுண்டாமென்பதன் றன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் றன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் றன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றி யிருக்கும் வகையையும், தத்துவ ஞானதிற்குப் பரம்பரா சாதனமாயுள்ளவைகளின் றன்மையையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூலை துக்க நிவர்த்தியிலும் பரமாநந்தப் பிராப்தியிலு மிச்சையுள்ள ஒவ்வொருவரும் அத்தியாவசியமாய் அறிய வேண்டியதென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.

புதுவை.

---

## "வித்தகம்"

### சந்தா விவரம்.

வருட சந்தா

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0

வெளி நாட்டிற்கு ,, ,, ரூ. 4 0 0

வித்தக நிலையம்,

புதுச்சேரி.

Imprimerie "VITTAGAM"— Pondichery. Le Gerant. R. Nagarattinam.